
# திராவிடத்தால் வாழ்கிறோம்

836

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

63

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## பவுத்தத்தின் அடிப்படை அறிவு!




புத்தரை ஓர் அவதாரமாக நிறுவியது ஆரியம். ஆனால் அவர், வேதகால பார்ப்பனியக் கட்டமைப்பைத் தகர்க்க இயக்கங் கண்ட போராளி என்று உடைத்துப் பேசியவர்கள் தந்தை பெரியாரும், புரட்சியாளர் அம்பேத்கரும்தான். 1954-ஆம் ஆண்டு ரங்கூனில் நடைபெற்ற உலக 3-வது பவுத்த மாநாட்டில் பெரியார், அம்பேத்கர் இருவரும் பங்கேற்றனர். அதே ஆண்டில் ஜனவரியில் ஈரோட்டில் ஒருநாள் புத்த மாநாட்டை நடத்தினார் பெரியார். இலங்கையைச் சேர்ந்த புத்த அறிஞர் ஜி.பி.மல்லல சேகரா தலைமையில், ஜனவரி 23-ஆம் தேதி இம்மாநாடு நடைபெற்றது.

மாநாட்டில் பேசிய புத்தர் சங்கத் தலைவர் வி.பி.எஸ்.மணியர், "இந்நாள் தமிழக வரலாற்றிலேயே குறிப்பிட வேண்டிய பொன்னாள். பார்ப்பனக் கபடக் கற்பனைகளை, உயர்வு தாழ்வுகளைக் களையவே பவுத்தம் தோன்றியது. இந்த மாநாட்டை பெரியார் கூட்டியதற்காக, பவுத்த உலகம் அவருக்கு நன்றி செலுத்தும்" என்றார்.

மற்றொரு புத்தர் சங்கத் தலைவரான ஜி.அப்பாதுரையார் பேசுகையில், "20 ஆண்டுகளுக்கு முன், சென்னையில் ஓர் பவுத்த மாநாடு கூடியது. அதில் பெரியார் கலந்து கொண்டு புத்தரது அருளறங்களை ஆராய வேண்டும் என்றார். உலகில் உள்ள மற்ற மதங்கள் அறியாமையை, அச்சத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் பவுத்தத்தின் அடிப்படையே அறிவுதான். மற்ற மதங்கள் பரமலோகத்தைப் பேசுகின்றன. ஆனால், பவுத்தம், மேல் உலகைப் பற்றி கவலைப்படாதே, இவ்வுலகிலேயே இன்பமாக வாழ வழி தேடு என்கிறது" என்று பலவற்றை ஒப்பிட்டுப் பேசினார்.

'திராவிடக் கொள்கையும் புத்தரும்' என்ற தலைப்பில் உரையாற்றிய சாமி சிதம்பரனார், "அறம், பொருள், இன்பம் என்ற மூன்றிலும் இவ்வுலக இன்பத்திற்கு என்ன தேவையோ அதுவே உள்ளன'' என பவுத்தத்தின் தொடர்ச்சி வள்ளுவம் என்பதை நிறுவினார்.

பெரியார் நிகழ்த்திய பேருரையில், "குறள் மாநாட்டைக் கூட்டி பாமர மக்களும் வள்ளுவரை அறியச் செய்தோம். அதுபோல, 'விக்கிரக வழிபாடு வேண்டாம்' என்று கூறினேன். ஆனால் மக்கள் கேட்கவில்லை. அதனால்தான் விநாயகர் பொம்மையை உடைத்தேன். வழக்குப் போட்டார்கள். 'அவர்கள் பொம்மை செய்து, அவர்கள் உடைக்கிறார்கள், நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்' என்று நீதிபதி வழக்கை தள்ளுபடி செய்தார். கடவுள் வேண்டாம் என்று நாம் உடைக்க வில்லை. பார்ப்பனர்களின் கற்பனையைத்தான் நாம் உடைத்தோம். புத்தரின் கொள்கையும் அதுதான்" என்றார்.

மாநாட்டின் தலைவர் மல்லல சேகரா பேசும்போது, "ஒரு நாட்டிற்கு மட்டும் ஒரு காலத்திற்கு மட்டும் பொருந்தும் கருத்துக்களை புத்தர் பேசவில்லை. எக்காலத்திற்கும் எந் நாட்டிற்கும் பொருந்தும் உலகப் பொது மறைக் கருத்துக்கள் புத்தருடையவை. இவை மனிதருக்கானவை, கடவுளுக் கானவை அல்ல பவுத்தம்" என்றார்.

எம்.ஆர்.இராதாவின் 'ரத்தக்கண்ணீர்' நாடகத்துடன் மாநாடு முடிவுற்றது.

அண்ணா, ஈ.வி.கே.சம்பத், கி.ஆ.பெ. விஸ்வநாதம், என்.வி.நடராசன், நாவலர், சிங்கப்பூர் வீரய்யா என பலரும் வாழ்த்தி, கடிதங்கள் அனுப்பியிருந்தனர்.

'திராவிடர்களை இழிவுபடுத்தி உருவாக்கப்பட்ட ஆரியக்கடவுள்களை திராவிடர்கள் வணங்கக்கூடாது', 'உலகில் வேறெந்த மதத்திலும் இல்லாத விக்கிரக வழிபாடு நமக்கும் வேண்டாம்', 'சாஸ்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் அனைத்தும் ஆரிய ஆதிக்கத்துக்கும் திராவிட அடிமைத்தனத்திற்குமே ஏற்பாடு செய்யப்பட்டவை', 'பிறவி பேதமற்ற சமத்துவம் மற்றும் அன்பை ஒருவொருக்கொருவர் பேண வேண்டுமென்பதே புத்தரின் கொள்கை. இதை எல்லோரும் பிரச்சாரமாக முன்னெடுக்க வேண்டும்' என பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அந்தப் பிரச்சாரத்தை பெரியாரே தொடர்ந்தார் தமிழ்நாடெங்கும்...

...கூட்டம் திரளும்

## உண்மையை ஏற்க மறுக்கும் மதவெறுப்பு!

ஹைதராபாத்தில், பல்வேறு இடங்களிலும் விசாகப்பட்டினத்திலும் 'கராச்சி பேக்கரி' என்ற பெயரில் புகழ்பெற்ற பேக்கரி கடைகள் உள்ளன. இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின்போது, கராச்சியிலிருந்து, இந்தியாவுக்கு வந்த கான்சந்த் ராம்னானியா என்பவர் 1953-ஆம் ஆண்டு ஹைதராபாத்தில் இந்த பேக்கரியைத் தொடங்கினார். அதனைத் தொடர்ந்து பல கிளைகளுடன் செயல்பட்டு வரும் கராச்சி பேக்கரி, இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே பிரச்சினை ஏற்படும் சமயங்களில் பிரச்சினைக்கு உள்ளாவதும் வழக்கம். தற்போது, அந்த பேக்கரியின் பெயரை மாற்ற வேண்டும் என பா.ஜ.க.வினர் மிரட்டி வந்த நிலையில், பேக்கரியின் பெயர்ப் பலகை மீது கருப்புத்துணியைப் போர்த்தி அந்தப் பெயரை மறைத்தும் அத்துமீறலில் ஈடுபட்டனர்.

'நாங்கள் பெயரை மாற்றாமல் வர்த்தகம் செய்ய, பாதுகாப்பு வழங்க வேண்டும் என அந்தக் கடையின் உரிமையாளர் ராஜேஷ் ராம்னானி, தெலுங்கானா முதல்வருக்குக் கோரிக்கை விடுத்தார்.

கடையின் உரிமையாளர் ராஜேஷ் ராம்னானி, தீவிர பா.ஜ.க. தொண்டர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தனது தேசபக்தியை வெளிக்காட்ட கடையில் தேசியக் கொடியை ஏற்றி வைக்கவும் செய்தார். இந்த நிலையில், ஒரு கும்பல் கடையின் பெயர்ப் பலகையை அடித்து நொறுக்கி உள்ளது. மதவெறுப்பு ஊட்டப்பட்ட கும்பலுக்கு, 'கராச்சி' என்னும் பெயரே இஸ்லாமியர்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்க வைக்கிறது. பாகிஸ்தானில் இருக்கும் ஒரு மாகாணத்தின் பெயர் என்பதால், கடை நடத்துபவர் இஸ்லாமியர் என்று எண்ணி, அந்தக் கடையை அடித்து நொறுக்கியுள்ளனர். அரசியல் பிழைப்புக்காக பா.ஜ.க. பரப்பி வரும் இஸ்லாமிய வெறுப்பு, இந்து மக்களுக்கு எதிராகவும் திரும்பும் என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

## ஃப்ளாஷ்பேக்



### இனமானப் பேராசிரியரின் பிறந்தநாள் விழா!



காஞ்சி காளிரத்தினம்

1989-ஆம் ஆண்டு, இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, அவருடைய இல்லத்தில் விழா எடுக்கப்பட்டது. கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மலர் மாலை அணிவித்து வாழ்த்தினார். அன்றைய நாளில், கழக உடன்பிறப்பாக நானும் சென்று பேராசிரியர் அவர்களை வாழ்த்தி மகிழ்ந்தேன். அன்று தலைவருடனும் பேராசிரியருடனும் புகைப்படத்தில் நானும் இடம் பிடித்தேன்.

**– காஞ்சி காளிரத்தினம்,**
**முன்னாள் தலைமைக்கழகப் பேச்சாளர்,**
**அண்ணா நகர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

63

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## தமிழ் நிலத்தில் அகத்தியர் – உடைக்கப்பட வேண்டிய புனித பிம்பம்!




"ஆரியக்கூத்தாடினாலும் தாண்டவக் கோனே, காசு காரியத்தில் கண் வையடா தாண்டவக்கோனே" என்று உடுமலை நாராயணகவி எழுதிய புகழ்பெற்ற பாடல் 'பராசக்தி' திரைப்படத்தில் இடம்பெற்றிருக்கும். இதில் காசு, பணம் மட்டும் பிரதானப்படுத்தப் பட்டிருக்கும். ஆனால், 'ஆரியம் கூத்தாடும்போது' நாம் காசில் மட்டுமல்ல, கருத்திலும் கவனமாக இருக்க வேண்டும் என்பதை அண்மை நிகழ்வொன்று உணர்த்தியிருக்கிறது.

இந்த ஆண்டு, பிப்ரவரி மாதம் அகத்தியர் குறித்த புராணச் செய்திகளை, ஆராய்ச்சி செய்கின்றோம் என்ற பெயரில், தமிழ்நாட்டில் உள்ள தமிழ்ச்சங்கங்கள், கல்வி நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு, அகத்தியரைப் பற்றிய கருத்தரங்குகள் 'பேச்சுப்போட்டி', 'கட்டுரைப் போட்டிகள்', 'சொற்பொழிவுகளை' நடத்துமாறும் அதற்கு ஒன்றிய அரசு நிதி உதவி அளிக்கும் என்றும் கூறியுள்ளது ஒரு கும்பல்.

சில கல்வி நிறுவனங்கள் துணைவேந்தர்களின் துணை கொண்டு, அகத்தியர் குறித்த கருத்தரங்குகளை நடத்தியும் முடித்தன. இத்தகைய ஆரியத்தின் அகத்தியர் மீள் உருவாக்க நடவடிக்கைகளுக்கு எதிரான செயல்பாடுகள் நம் தரப்பிலிருந்தும் முன்னெடுக்கப்பட்டன.

1931-இல் 'குடி அரசு' பதிப்பகத்தின் வெளியீடாக பேராசிரியர் கா.நமச்சிவாயம் எழுதிய 'அகத்தியர் ஓர் ஆராய்ச்சி' என்ற நூல், உடனடியாக திராவிடர் கழகத்தால் மறு வெளியீடு செய்யப்பட்டது. அதேபோல் சிந்துவெளி பண்பாட்டு ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன் அவர்கள், மார்ச் 7, 2025-இல், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 'அகத்தியர் - ஒரு மறுபார்வை' என்னும் உரை நிகழ்த்தினார்.

> **அகத்தியரைக் கொண்டு ஆரியம் நிகழ்த்தத் துடிக்கும் கூத்துகளை அம்பலப்படுத்தும் இந்நூல் அவசியமான வருகை எனலாம்.**

1930-ஆம் ஆண்டு வெளியான கே.என்.சிவராஜ பிள்ளையின் ஆங்கில நூல் கிட்டத்தட்ட, நூற்றாண்டை நிறைவு செய்யும் தருவாயில், தமிழாக்கம் கண்டுள்ளது. ஆய்வு மாணவர் இஸ்க்ரா மொழியாக்கத்தில் பரிசல் புத்தக நிலையம் இந்நூலை வெளியிட்டுள்ளது. அகத்தியரை புனித பிம்பமாக்கி, உயர்ந்த நிலையில் அமர்த்தியுள்ள கருத்துக்களின் மீது அடிப்படையான, பகுத்தறிவுக்கு உகந்த கேள்விகளைத் தொடுக்கிறது இந்நூல்.

ஒருவர் ஒரே நேரத்தில் இலக்கண நூல்களை இயற்றுபவராகவும், தெய்வீகத்தன்மை கொண்டவராகவும், சித்த வைத்தியத்தில் தேர்ந்தவராகவும், அரச்சகர்களுக்கு ஆலோசனை கூறும் நிலையிலும், மாயா ஜாலங்கள் செய்பவராகவும், ஆரியத்தை பரப்ப வந்த முனியாகவும் திகழ முடியுமா? அதுவும் வெவ்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்த வேறுபட்ட மாற்றங்களுக்கு ஒருவரே எப்படிக் காரணமாக இருக்க முடியும்? இப்படியான அடிப்படையான கேள்விகளை எழுப்பிக்கொண்டு அவற்றிற்கு ஒவ்வொன்றாக பதில் தேடுகிறது இந்நூல்.

அகத்தியரை ஒரு **'அரை வரலாற்றுக் கதாபாத்திரம்'** என்றும், **'வரலாற்றுத் தனியர்'** என்றும், அதீதமாக உருவகம் செய்யப்பட்ட உள்ளீடற்ற பிம்பம் என்றும் நிறுவும் இந்நூல் ஒரு கருத்தரங்கத்திற்கே உரிய தகவல்களைக் கொண்டிருக்கிறது. அகத்தியரைக் கொண்டு ஆரியம் நிகழ்த்தத் துடிக்கும் கூத்துகளை அம்பலப்படுத்தும் இந்நூல் அவசியமான வருகை எனலாம்.

...வாசிப்போம்.

## கழக வரலாறு

### உழுபவனுக்கே நிலம் சொந்தம்!

1959-ஆம் ஆண்டு, பிப்ரவரி 7 மற்றும் 8-ஆம் தேதிகளில் கழகத்தின் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டம், புதுக்கோட்டையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தின் தீர்மானங்களில் ஒன்று, 'உழுபவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டும்; நிலப்பிரபுத்துவ முறை ஒழிந்தாக வேண்டும்; நில உச்சவரம்பு வேண்டும்' என்பதை வலியுறுத்தியது. 'நிலச் சீர்திருத்தத் திட்டம்', 'கூட்டுப் பண்ணை முறை' ஆகிய வற்றினை ஆராய்ந்து தலைமைக் கழகத்துக்கு அறிவிப்பதற்கான குழுவினையும் பொதுக்குழு நியமித்தது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.